01.10.2021
O.S.No.50/2018

வா. சா. 1 அய்யாச்சாமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனது தொழில் விவசாயம், தேங்காய் வியாபாரம் ஆகும். நத்தத்தில் அய்யாச்சாமி என்ற பெயரில் தேங்காய் குடோன் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு முத்துக்கிருஷ்ணன், சத்தியமூர்த்தி என்ற இரண்டு மகன்கள் உள்ளார்கள். எனது மருமகன் வெங்கடேஷ். என் மகன் சக்தியமூர்த்தி, வெங்கடேசும் தேங்காய் வியாபாரத்திற்கு உதவியாக உள்ளார்கள் என்றால் இல்லை. எனக்கு வங்கி கணக்கு உள்ளது. கனரா வங்கி, நத்தத்தில் வங்கி கணக்கு உள்ளது. வருமான வரி கணக்கு இல்லை. காட்டவில்லை. வருமானவரி கட்டுவதில்லை. எனக்கு சொத்துக்கள் உள்ளது. நத்தத்தில் என் மனைவி பேரில் 4 ஏக்கரில் தோப்பு உள்ளது. என் பேரில் சொத்து எதுவும் கிடையாது. வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால் கொடுக்கல் வாங்கல் எவ்வளவு பணம் உள்ளது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கு புத்தகம் என்னிடம் உள்ளது. அதை தாக்கல் செய்யலாம். அதை பார்த்தால் நான் சொல்வது போல் பணம் கொடுக்கும் அளவுக்கு வசதி உள்ளதா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி ஆட்சேபனையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களை மறுத்து நான் கூடுதல் பிராதோ, முதல் விசாரணையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.1 கடனுறுதிச் சீட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்று பிரதிவாதி மறுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கையெழுத்து பிரதிவாதியினுடைய கையெழுத்துதான் என்று நிரூபிக்க இன்றய தேதிவரை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறவில்லை என்றால் சரிதான். நான் தேங்காய்களை பிரதிவாதியின் வாயிலாக தேங்காய் குத்தகைதாரர்களிடமும் தோப்பு சொந்தக்காரர்களிடமும் பெற்று வியாபாரம் செய்கிறேன் என்றால் இல்லை. வாதசாஆ.1 ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றும் அதில் சாட்சி கையெழுத்து செய்துள்ளவர்களையும் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. மணிவண்ணன் பழக்கமானவர். செல்லப்பா பழக்கமானவர். சுந்தர்பாபுவும் பழக்கமானவர். மேற்படி நபர்கள் எனக்கு மட்டும் பழக்கமானவர்கள் என்றும் நான் அவர்களை பயன்படுத்தி பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் 1.11.2014 ம் தேதி பூர்த்தி செய்யப்படாத காங்கிரீட் பேப்பரிலோ, 50 ரூபாய் முத்திரைத்தாளில் கையொப்பமிட்டு ரூ.1 லட்சம்

தேங்காய்களை சப்ளை செய்வதற்காக கொடுத்ததாக பிரதிவாதி சொல்லி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி விசாரணை முதல் விசாரணை வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பெற்றுக்கொண்ட தொகைக்காக 7.12.2014 முதல் 21.12.2016 வரைக்குமான கால கட்டத்தில் தேங்காய்களை சப்ளை செய்தார் என்றும் அதற்காக என் மகன் கொடுத்த ஆவணங்கள்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் என்றால் சரியல்ல. அதில் உள்ள எழுத்துக்கள் என் மகன் சத்தியமூர்த்தி எழுதியவை அல்ல. பிரதிவாதி மேற்படி ஆவணத்தை இ.ம.81/2018 ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டும் நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி ஆவணம் என் மகனால் எழுதிக்கொடுக்கப்பட்டவை அல்ல என்று மறுத்து கூறவில்லை என்றால் சரிதான். எல்லா ஆவணங்களும் என் மகனால் வியாபாரத்திற்காக வழங்கப்பட்டவை என்றும் வழக்கிற்காக தற்போது நான் இல்லை என்று மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்று தெரியாது. பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார். என்னிடம் 10 ஆண்டுகள் தேங்காய் வெட்டும் வேலை பார்த்தார். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 15.11.2016, 8.5.2017 ஆகிய தேதிகளில் அடமானம் வைக்கப்பட்ட விவரம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். வாதசாஆ.1 ஐ உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றும் அதில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடைய கையெழுத்து இல்லை என்றால் தவறு. பிரதிவாதிக்கு 10 லட்சம் பெறும் அளவுக்கு தகுதி இல்லை என்றும் அந்த தொகையை கொடுக்கும் அளவுக்கு எனக்கும் தகுதியில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் வாதசாஆ.1 ஐ உற்பத்தி செய்து பொய் வழக்கு போட்டு உள்ளேன் என்றால் சரியல்ல.

Sd. M.K.Jamuna,
Prl.Sessions Judge,
Dindigul